
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1189

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

55

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!




ஓவியம் : ரவி பேலட்

*2003-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி, 'தி ஸ்டேட்ஸ்மேன்' ஆங்கில நாளிதழ், தமிழ்நாட்டின் அரசியல் சூழல் குறித்து எழுதிய விரிவான கட்டுரையில், இராணி மேரி கல்லூரி இடிப்பதற்கு அம்மையார் ஜெயலலிதா அரசாங்கம் எடுத்த முயற்சிகளை விமர்சனம் செய்திருந்தது. "LAWLESS IN TAMIL NADU' எனத் தலைப்பிட்டு, 'TIME RIPE FOR REGIME CHANGE' என்கிற துணைத் தலைப்பில் எழுதிய தலையங்கத்தில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவரைக் கைதுசெய்து, சிறையில் அடைத்தது சட்ட விரோதம் எனக் குறிப்பிட்டிருந்தது.*

*"தமிழ்நாடு சட்டமன்ற தி.மு.கழக உறுப்பினர்களில் ஒருவரும், இரண்டு முறை சென்னை மாநகர மேயராக இருந்தவருமான மு.க.ஸ்டாலின் அவர்களை, இட்டுக்கட்டிய குற்றச்சாட்டுகளின் மீது நள்ளிரவிலே கைதுசெய்த செயலின் மூலம், உச்ச நீதிமன்றம் 1994-ஆம் ஆண்டிலும் 1997-ஆம் ஆண்டிலும், முறையே ஜோகிந்தர் குமார் வழக்கிலும் டி.கே.பாசு வழக்கிலும், கைதுசெய்வதற்காக வழங்கிய விதிமுறைகளை எல்லாம் எந்த அளவிற்கு மதிக்கவில்லை என்பதை மீண்டும் ஒரு முறை அ.இ.அ.தி.மு.க. அரசாங்கம் செய்து காட்டியிருக்கின்றது.*

*'மு.க.ஸ்டாலினின் தந்தை கலைஞர் அவர்கள், இரண்டாண்டுகளுக்கு முன்பு சாதாரண குற்றச்சாட்டுகளின் பேரில், இதைப் போலவே நள்ளிரவில் கைதுசெய்யப்பட்ட போது - எதிர்காலத்தில் அரசியல் சட்டக் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், வேண்டுமென்றே பல தகராறுகளை உருவாக்கும் இதுபோன்ற எண்ணத்தைத் தவிர்க்க வேண்டுமென்று ஒன்றிய அரசின் உள்துறை, மாநில அரசை எச்சரித்தது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் இதுபோன்றதொரு துரதிருஷ்டமான செயல்களில் மற்றொரு முறை ஈடுபடாத அளவிற்கு மாநில அரசு பார்த்துக்கொள்ள வேண்டும்!' என்றும் ஒன்றிய அரசு அப்போது தெரிவித்திருந்தது.*

*'2001-ஆம் ஆண்டு மீண்டும் பதவியேற்ற நாள் முதல், ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க. அரசின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளே அதன் செயல்பாடுகளாக இருக்கின்றன, என்றெல்லாம் எழுதியிருந்தது. ஆனால், அம்மையார் ஜெயலலிதா அரசு, அந்த விமர்சனங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதாக இல்லை' என 'நெஞ்சுக்கு நீதி'யில் குறிப்பிட்டிருக்கிறார் கலைஞர்.*

*நள்ளிரவில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஸ்டாலினும், மற்றவர்களும் கைதுசெய்யப்பட்ட பிரச்சினையை ஏப்ரல் மாதத்தில் சட்டமன்றத்தில் கழக உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எழுப்பினர். அவர்களைப் பேச அனுமதிக்காத நிலையில், அனைத்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்டனர். அவர்கள் அப்படியே சாலை மறியலில் ஈடுபட, கைதுசெய்யப்பட்டு வடக்கு கடற்கரைக் காவல் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.*

*இந்த கைதுகளைக் கண்டித்தும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, சட்ட விரோதமாகச் சிறையில் அடைக்கப்பட்ட கழகத் தலை வரையும் அவரோடு கைதுசெய்யப்பட்ட க.பொன்முடி, எஸ்.ஏ.எம்.உசேன், ஜெ.அன்பழகன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்களையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் என எஸ்.ஏ.எம். உசேன் அவர்களின் மகன் எஸ்.எம்.அப்துல் காதர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் சண்முகம் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் முன்பாக ஆட்கொணர்வு மனுவினைத் தாக்கல் செய்தார். மனுதாரர் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர் சங்கர சுப்பு, 'தமிழ்நாடு அரசின் சட்ட விரோத கைதினைச் சுட்டிக்காட்டி வலுவான வாதங்களை முன்வைத்து, பிணை பெற்றார். நீதிமன்றப் பிணையில் வெளிவந்தபின்னரும் அந்த வழக்கு 2005-ஆம் ஆண்டுவரை நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.*

> **மக்கள் மன்றத்தில் மாபெரும் அறப்போர்களை நடத்தியது கழகம். கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் பெரும் தடியடியை நிகழ்த்தியது அம்மையார் அரசு.**

**மடை மாற்றிய கைது**

*தலைவர் அவர்களைக் கைதுசெய்வதற்குப் பின்னணியில் அன்றைய காலகட்டத்தில் கொந்தளிப்பாக இருந்த அரசு ஊழியர்கள் போராட்டம், கருத்துரிமைக்குச் சவால் விடும் வகையில் காண்போரையெல்லாம் 'பொடா' சட்டத்தில் அடைத்துக்கொண்டிருந்த சிக்கல்களும் இருந்தன. அவற்றை மடைமாற்றம் செய்யவே, சட்டமன்ற உறுப்பினர்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளார் அம்மையார் ஜெயலலிதா என கலைஞர் அப்போதைய உண்மையான களச்சூழலை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தினார்.*

*அப்படியான காலகட்டத்தில்தான், கல்லூரி இடிப்புக்கு எதிரான பல மேல்முறை யீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. குறிப்பாக, சென்னை நகரம் தொடர்பான தற்போதைய கடலோர ஒழுங்குமுறை மண்டல வகைப்பாட்டை உடனடியாகவும் முழுமையாகவும் மறுஆய்வு செய்யவும், சாந்தோம் தேவாலயத்திலிருந்து, சென்னை உயர் நீதிமன்றம் வரையிலான மெரினா பகுதி உட்பட, சூழலியல் மற்றும் கட்டடக்கலை முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைக் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்-I (CRZ-I) ஆக அறிவிக்கவும் அரசுக்கு உத்தரவிடக் கோரி, W.P. எண் 10937/2003 மற்றும் W.P. எண் 11076/2003 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு, 27.05.2003 அன்று இடைக்கால உத்தரவிட்ட நீதிமன்றம், கல்லூரியை இடிக்கக் கூடாது என்று உத்தரவிட்டது. இந்த மேல்முறையீட்டு மனுக்கள் நிலுவையில் இருந்தபோது, கல்லூரிக் கட்டடத்தை இடிக்க வேண்டாம் என்றும் செயலகத்தை வேறு இடத்தில் கட்டவும் அரசு ஒரு முடிவை எடுத்தது.*

*மேல்முறையீட்டு மனு எண் 15518/2003-ஐ, நிலுவையில் உள்ள மற்ற மேல்முறையீட்டு மனுக்களான 10937/2003 மற்றும் 11076/2003 ஆகியவற்றுடன் பட்டியலிட வேண்டும் என்றும் இடைக்காலத் தீர்ப்பு அளித்த தனி நீதிபதி உத்தரவிட்டார். இந்த 15518/2003 - முறையீட்டு மனுவைத்தான் மாநில அரசு எதிர்த்துக் கேள்விகளை எழுப்பியது. தொடக்கத்தில், மேல்முறையீட்டில் ஒன்றிய அரசின் சார்பில், ஆஜரான கூடுதல் சொலி சிட்டர் ஜெனரல், பின்னர் மாநில அரசு தனது மனதை மாற்றிக்கொண்டு, இராணி மேரி கல்லூரியை இடித்துவிட்டு, அந்த நிலத்தில் தலைமைச் செயலகக் கட்டடம் கட்டும் எண்ணத்தைக் கைவிட்டதாகத் தெரிவித்தார். இந்த வழக்கும் 2006-ஆம் ஆண்டு வரை நீடித்தது.*

*இதற்கிடையே, மக்கள் மன்றத்தில் மாபெரும் அறப்போர்களை நடத்தியது கழகம். கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் பெரும் தடியடியை நிகழ்த்தியது அம்மையார் அரசு. அதற்கு எதிராகவும் அனைத்து கட்சிகளின் அணிவகுப்புப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தார் தலைவர் கலைஞர்.*

***உடன்பிறப்பே!*** *என அவர் எழுதிய கடிதம் ஒன்றில்,*

***வீழ்ச்சியுறு தமிழகத்தில்,***
***எழுச்சி வேண்டும்!***
***விசை ஒடிந்த தேகத்தில்***
***வன்மை வேண்டும்!***
***சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப்***
***பொறாமை தன்னைத்***
***தொகையாக எதிர்நிறுத்தித்***
***தூள் தூளாக்கும்***
***காழ்சிந்தை, மறச்செயல்கள்***
***மிகவும் வேண்டும்!***

*- அன்புடன் மு.க.*

*என அவர் விடுத்த அறைகூவல், அந்த வழக்கின் திசையை மாற்றியது.*

**...தொடரும்**

## வாழ்வாதாரத்தைக் காக்கும் பொறுப்பு!

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில், 2026 மே மாதம் ஒரு கருப்பு அத்தியாயமாகவே அமைந்துவிட்டது என சமூக வலைதளங்கள் எங்கும் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் இருக்கும் ஆபத்துகள் குறித்தும், கழகத் தலைவரின் கடந்த ஐந்து ஆண்டுக்கால செயல்பாடுகள் குறித்தும், நூற்றுக்கணக்கான பதிவுகள் எழுதப்பட்டுள்ளன.

'கடந்த ஐந்தாண்டுக்கால தி.மு.க. ஆட்சி, என் அனுபவத்தில் நான் கண்ட சிறந்த ஆட்சி என்பதில் எனக்கு ஐயமில்லை. குறைகளற்ற ஆட்சி என்று எதுவும் கிடையாது. ஆனால், சிறந்த முன்னெடுப்புகளைச் சாத்தியப்படுத்திய ஆட்சி. அதற்குக் கிடைத்துள்ள தேர்தல் தீர்ப்பு ஆரோக்கியமானதல்ல' எனக் குறிப்பிட்டுள்ளார் அரசியல் விமர்சகர் ராஜன் குறை கிருஷ்ணன்.

'எனது அனுபவத்தில் தமிழர் நலன், ஜனநாயகப் பண்பு, கூர்மையான அரசியல் கொள்கை என இவற்றில் தேர்ந்த தலைவர் என அறிஞர் அண்ணாவை அடுத்து மு.க.ஸ்டாலினைக் கருதுகிறேன். அவர் தனது தொகுதியில் தோல்வியுறுவாரானால், அதற்காக அம்மக்கள் பின்னாளில் வருந்துவர் என உறுதியாக நினைக்கிறேன். தொங்கு சட்டமன்றம், பாசிச-பாயாச அரசியலின் நடைமுறையைப் பார்க்கப் போகிறோம். ஒரு கட்சி எனும் அளவில் தி.மு.க. வலுவாகவே உள்ளது. தனது கடமையை அது ஆற்றும்' எனக் குறிப்பிட்டுள்ளார், எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன்.

'தி.மு.க. சிறந்த ஆட்சியைத் தரவில்லை என்று குற்றம் சாட்டியவர்களுக்கு, 'தி.மு.க.வைவிட சிறந்த ஆட்சியை யாராலும் வழங்க முடியாது' என்பதை அடுத்த ஐந்தாண்டுகள் உணர்த்தும். தங்களின் தொகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களைவிட, சிறப்பாகச் செயல்பட்டவர்கள் யாரும் இருக்க முடியாது. மக்களின் தகுதிக்கு ஏற்பவே தலைவன் அமைவான்' எனக் குறிப்பிட்டுள்ளார், சமூக செயல்பாட்டாளர் அனிதா மணிரத்தினம்.

அரசியல் என்பது ஒரு கலை மட்டுமல்ல, அது கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் ஒரு மாபெரும் பொறுப்பு. கழகம் ஆட்சியில் இல்லை என்றாலும், அந்தப் பொறுப்பில் இருந்து என்றைக்கும் பின்வாங்காது!

## ஃப்ளாஷ்பேக்



சந்தோஷ் ராஜாபூசணம்



### கழகப் பணியில் அர்ப்பணிப்புடன்...

1995-ஆம் ஆண்டு, சென்னை 110-வது வட்ட இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றபோது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது, எடுத்த படம். தொடர்ந்து ஆயிரம் விளக்கு இளைஞர் அணி துணை அமைப்பாளர், சென்னை மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் பொறுப்புகளை வகித்து, மாவட்டப் பிரதிநிதியாக இருந்த மறைந்த என் தந்தை சி.எஸ்.ராஜாபூசணம் அவர்கள் காட்டிய வழியில், கழகப் பணியாற்றுவதில் மகிழ்கிறேன்.

**- சந்தோஷ் ராஜாபூசணம்,**
**சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி**
**துணை அமைப்பாளர், ஆயிரம் விளக்கு கிழக்கு, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### வாருங்கள், போர் முனைக்கு!

15.04.1944 அன்று 'குடிஅரசு' இதழில், மாணவர்களை நோக்கி அறிக்கை ஒன்று விடுத்திருந்தார் பெரியார். அதில், "நாட்டில் உங்கள் நிலைமையைப் பாருங்கள். இந்த நிலையை மாற்ற நாமே அருகர்கள். வெற்றி பெறினும் தோல்வி வரினும் நாம் உழைக்க வேண்டியவர்களாகிவிட்டோம். விழியுங்கள், எழுந்திருங்கள், ஆழ்ந்து சிந்தியுங்கள். உங்கள் இனத்தை மனிதத்தன்மை ஆக்குங்கள். நாடு, நகரம் பட்டிதொட்டியெங்கும் தன்மானக் குரலெழுப்புங்கள். வாருங்கள் போர் முனைக்கு' என நீண்டது அந்த அறிக்கை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900